ஓலை 35 | ஓசை 134 | மார்ச் 2023

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

அகர முதல

உரக்க சொல்வோம்

# அறிவோம் வள்ளுவம்!



**என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு**
**நன்றி பயவா வினை.**

புகழையும் அறத்தையும் தாராத (தூய்மை அற்ற) செயல்களை எக்காலத்திலும் ஒருவன் செய்யாமல் விட்டொழிக்க வேண்டும்.

**Translation:**

From action evermore thyself restrain
Of glory and of good that yields no gain.

**Explanation:**

Ministers should at all times avoid acts which, in addition to fame, yield no benefit (for the future).

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# விமர்புன்

அந்த காலத்தில் ஆறு மலை மரங்கள் போன்றவற்றையும் புனிதமாக கருதும் வழக்கம் மக்களிடையே இருந்து வந்தது!

ஒரு ஆற்றில் குளிக்கும் பொழுது கூட ஆடையில்லாமல் குளிப்பது அந்த ஆற்றை அவமானப்படுத்துவது என்று கருதியவர்கள் தமிழர்கள்! அதுமட்டுமின்றி மலஜலம் கழித்துவிட்டு ஆற்றில் இறங்கி அப்படியே "கால் கழுவுவதை" (இங்கும் எவ்வளவு நாகரீகமான வார்த்தைகளை தமிழர்கள் பயன்படுத்துகிறார்கள் என்று கவனியுங்கள்!) நீர்நிலைகளை அவமானப்படுத்தும் செயலாக தமிழர்கள் கருதினர்!

அதனால், இயற்கை உபாதைகளை கழிக்க செல்லும்பொழுது கையில், கூடவே நீர் மொண்டு உபயோகப்படுத்த "ஒரு சொம்பை கையில் எடுத்துச் செல்வார்கள்"!




அப்படி ஒரு மனிதனை 'காக்கா பிடிப்பதற்கு'', அவன் எடுத்துச் செல்ல வேண்டிய சொம்பை, இன்னொருவன் பவ்வியமாக எடுத்துச் சென்றால் அவனுக்கு "சொம்பு தூக்குபவன்", என்ற இழிசொல் வந்து சேரும்!அப்படித்தான், "சொம்பு தூக்குவது" என்ற இழி சொல்லாக அது மாறியது!

இழிவல்ல சொம்பு தூக்கல்
தமிழர் பண்பாட்டின் தன்னிகரற்ற உச்சம்
நீரையும் அவமானப் படுத்தாதிருத்தல்

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி,திருச்சி

# எனக்கு பிடித்த புத்தகம்

## வீரயுக நாயகன் வேள்பாரி

### ஆசிரியர் - மதிப்பிற்குரிய திரு.சு. வெங்கடேசன் அவர்கள்

சிறுவிதையில் பெருங்காட்டை செழிப்புடனே புனைந்திட்டார்
இறுதிவரை ஆர்வமதும் இமியளவும் குறையாமல்
மறையெனவே வார்த்திட்டார் மலைநாட்டு தலைவனையும்
இறையெனவே பாரியவன் இதயத்தில் பதிந்திட்டான்

எண்ணற்ற வளத்தினையும் இயற்கையவள் கொண்டிருந்தாள்
மண்மீதில் அத்தனையும் மாண்புடனே வடித்திட்டார்
வண்ணங்கள் பலவாக வரைகிறதே மனத்திரையில்
எண்ணலைகள் இன்றளவும் எழிலுடனே மோதிடுதே






எடுத்தாண்ட விடயங்கள் ஏற்றிடுதே கற்பனையை
தொடுத்திட்ட சொல்வளமும் தோரணமாய் ஆகிறதே
அடுக்கடுக்காய் அமிழ்தத்தை அடக்கிவைத்த பனுவலது
கடுகளவும் தொய்வின்றி காட்டிடுதே ஆளுமையை

இயற்கையோடே இணைந்திட்ட இணையில்லா வாழ்வுதனை
வியக்கவைக்கும் படியிங்கு விரிந்திருக்கும் கருக்களமும்
மயக்கத்தில் ஆழ்த்திடுதே மதிமயக்கும் தனைமயக்கி
நயன்மையுடன் நடையழகும் நள்ளிரவை பகலாக்கி

பாரியென்ற பெருங்கடலின் பண்புகளை இயம்பிடுதே
பாரினிலே இவனைப்போல் பார்த்திடவும் முடியாதே
வாரிவாரி வழங்குவதில் வள்ளலிவன் என்றறிவோம்
சீரியதோர் அவன்வாழ்வை செப்பிடுமே வேள்பாரி

மூவேந்தர் படைகளுமே முற்றழிந்து போயினவே
காவியங்கள் பாடாத கள்ளமில்லா உள்ளத்தை
காவியத்தின் காவியமாய் கடைந்தெடுத்த அற்புதமாம்
மேவியதோர் சொல்லின்றி மேலுரைக்க திணறிடுதே

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# மரியே வாழ்க! வாழ்க மரியே!

என் இதயத்தில் வாசம் செய்யும்
பாசமுள்ள பரிசுத்த பரமனின் தாயே!
உம்மையே நித்தமும் பூமியாய் சுத்தி வந்து
வணங்கிடும் பக்தன் நானம்மா!
தங்கக் கரங்களில் தங்கப் பாலகனைத் தாங்கி நிற்கும்
தங்கத் தாய் மரியே!
மங்கிய என் வாழ்வை அருளொளி பொழிந்து
பொங்கி வரச் செய்த அருள் நிறை மரியே!
கடிகார முள்ளாய் எந்நாளும் உம்மையே சுற்றி வரும்
உண்மை தொண்டன் நான் அம்மா!
நான் கவிப்பாட அடியெடுத்து கொடுக்கும்
அமுதசுரபியே அற்புதத் தாயே!
அனைத்திலும் என்னை அரவணைத்து
பாதுகாக்கும் ஆரோக்கியத்தாயே!
குடிசையில் இருந்த என்னை கோபுரத்தில் வைத்து
அழகுப் பார்த்தது நீயே!
மரியே வாழ்க! என்றால்
அன்பினைப் பொழியும் அன்பின் பிறப்பிடமே!
வாழ்க மரியே! என்றால்
அருளினைப் பொழியும் அருளின் ஒளியே!
நலத்தையும் வளத்தையும் திருமகனிடமிருந்து
எந்நாளும் பெற்றுத் தரும் மாரியே! வாழ்க!
கல்லாய் இருந்த என்னை
கவிஞானக்கிய கருணைக் கடலே நீ வாழ்க!



கவிஞர் அ.இராபர்ட்கென்னடி,கானூர்

# மற்றுமொரு முறை மறுஆய்வு

இரவு எழுதியக்
கருப்பு காவியத்தை
அழிக்க
பன்னிரெண்டு
மணி நேரங்கள்
ஆகிறது.

இமைகளின் இறுதி
முத்தமே
மரணமாகிறது.

இது வரை
எழுதாதக்
கவிதைகள்
அனைத்தும்
இயற்கையிடமே
இருக்கிறது.

பூமி பந்தின்
ஒரு ஓரத்தில்
நீயும்,
இன்னொரு ஓரத்தில்
நானும்
இருக்கிறோம்
ஆனால்
நம்மை
சுற்றுவது
என்னவோ
காலம்தான்.



முற்றிலும்
இருள் சூழ்ந்த
என் உலகுக்கு
உன் ஒற்றைப்
புன்னகை
மட்டுமே
விளக்கு.

மகா சமுத்திரங்களின்
எண்ணிக்கையை
மற்றுமொரு முறை
மறுஆய்வுச் செய்யுங்கள்
எங்கோ
ஒரு மூலையில்
என்னவளின்
கண்ணீர் துளி

கவிஞர் இரா.மதிராஜ்

# பயணம்

விட்டுச் சென்று விட்டாய் காரணம் இல்லாமல்
விட்டுச்சென்ற இடம் வீதி என்று
என்கின்ற சேதியாவது தெரியுமா உனக்கு ?
வீதியின் விற்பனை பொருளாய்
விலை போகாமல் நிற்கிறேன் .
நீ விட்டு சென்ற அதே இடத்தில்.



கவிஞர் மரு.சு.டேனியல் ராஜ சுந்தரம்,வீரிருப்பு

# அடையாளம்

அடுத்தவர் நெஞ்சம்
இனிக்க இனிக்க
ஒரு செய்தியைத் தரவேண்டிய
தருணத்தில்
கூச்சலும் அழுகையுமாகத்தான்
இக்கணத்தில்
பிரசவிக்க முடிகிறது.
அங்குமிங்கும்
தாவும் மனதை வைத்துக் கொண்டு
தீர்க்கமான முடிவெடுப்பது
சாத்தியப்பட இயலவில்லை.
பண்பாட்டிற்கு அடையாளமாய்
முன்னிற்க வேண்டியது
காலத்தின்
கட்டாயமாக்கப் பட்டிருப்பினும்
அதிகார வர்க்கங்களுக்கு
அடங்கி
அடிமையாய் வீண்பழியேற்று
கனத்த ஆயுதத்தால்
காயங்கள் வாங்கி
ஓர் ஒற்றை அடையளத்தை
உருவாக்க முனைந்து
மொத்தமாய்ச் சரிகிறேன்
நான்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# கால நதியினிலே!

எப்போதும் நிற்காமல் ஓடிடும் காலமும்,நதியும்.
எவர்க்கும் அஞ்சாது
யாருக்காகவும் காத்திருக்காது.
நதியில் உண்டு ஆழமும்,தூரமும்.
காலவோட்டத்திலுண்டு நீள் பயணம்.
இரண்டும் திரும்பாது,
முன்னோக்கியே ஓடும்.
தேங்கிய நதியே கடல்.
ஓய்வெடுக்காது,உறங்காது
அலையெழும்,விழும்.
காலநதியினிலே எல்லாமே புதிர் தான்.
கால நதி போடும் தாளங்கள் தான் எத்தனை!
காலநதியில் பிறப்பதே பட்டறிவு.
காலநதியின் ஓட்டத்தோடு ஓடும் நனவிலி மனம்.
பழைய உடலின் படிவங்கள் ஏந்தி
புதிய உடல் பிறக்கும்.
இக்காயம் நீங்கி
இனியொரு காயத்தில் புக்காது
இருக்க, நாம் யாரென்று அறிந்திடுவோம்.
தனக்குள் நுழைந்து ஆராய்வோம்.
நானென்ற இருளிலிருந்து கரையேறுவோம்.
ஒளிவெள்ள பிரபஞ்ச உணர்வு பெறுவோம்.

கவிஞர் செ.கலைவாணி,ஆஸ்திரேலியா

# என் வரம் அவர்!

காலையிலே கண் விழித்து
தூரதேசம் சென்றிடுவார்
கண் அயர்ந்து தூங்கையிலே
வீட்டு வாசல் மிதித்திடுவார்

ஓய்வு என்ற ஒன்றை ஒருநாளும்
அவர் வாழ்வில் நான் கண்டதில்லை
குடும்பத்து உயிர் காக்க
அவர் அயராது உழைத்திடுவார்

மனைவி மக்களை அவர் மறந்ததில்லை
நிம்மதியான வாழ்வு தர அவர் மறுத்ததில்லை
வீண்வம்பு அவர் வளர்த்ததில்லை
குடும்பத்தை தூணாக அவர் தாங்கிடுவார்

துன்பத்தை ஒருநாளும் தந்ததில்லை
அவர் துன்பத்தை பகிர்ந்ததும் இல்லை
இன்பமதை தந்திட மறந்ததும் இல்லை
என் நெஞ்சத்தில் இடம்பிடிக்க தவறியதும் இல்லை

நான் அன்பிற்காக ஏங்கும் பொழுதெல்லாம்
வெயிலில் காய்ந்த உதட்டால் முத்தமிடுவார்
உழைத்து உழைத்து தேய்ந்த கைகளினால்
வாரி என்னை அணைத்திடுவார்

நான் கேட்டதெல்லாம் அவர் கொடுத்துவிட்டு
அவர் போல் வாழாது என்னை
கல்வி கற்று மேதையாக வாழ்வதாய்
வாக்கு ஒன்றை தரச்சொன்னார்

அவர் கேட்டதை நான் கொடுத்து விட்டு
அவரை இறுக்கிக் கட்டியணைத்துக் கொண்டேன்
ஒவ்வொரு குழந்தைக்கும் அப்பா வரம்தான்
அப்பாக்கு வரமான குழந்தையாக மாறிடுவோம்

கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# என் தம்பூபூபூ

கண்ணே உன்னை காணாமல்
கலங்கி தவித்தேனே
என் காதில் உன் குரல் கேளாமல் ஏங்கி வாடினேனே
அன்பே என் அன்பு மலரே
என் கனவில் பூத்த மலரே.

அன்பே உன்னை பாராமல்
அழுது புலம்பினேன்
அன்பு முகம் காணாமல் ஏங்கி வாடினேன்.
அன்பே அன்பின் மலரே
உன் நெஞ்சில் நான் தவழும்
மழலையே!

நீ செய்த குறும்பு நினைவில் வந்து
என்னை வதைத்ததே
ஆயினும் உன்னை என் உறவு என்று மனது துடித்ததே
அன்பே உன் நிழலில் உன் தூய அன்பு
என்னை காத்ததே
அதனால் நீயே என் உயிர் என்று
உன்னை நெருங்கியதே!
அன்பே உன் மடியில் நான் தவழ்ந்திட
இடம் அளித்தாயே!
அதனால் உன் அன்பில்
மெய்சிலிர்த்திட வைத்தாயே
இனி உன்னை பிரியமாட்டேனே
பிரிந்தால் இதயம் தாங்கமாட்டாதே.

கவிஞர் ஜெனி கிரேஸி,மதுரை

# மயானம் மாறுபட்டதே

மாண்டவன் சுமந்தானே பூமியில் தான் பெற்றவனை
நான் சுமந்த தோளில் நீ சுமக்க மறந்தாயா மகனே
காலம் மாறலாம் உன் காலடியும் மாறுபட்டதா என்னை சுமக்க
தீண்டாத வாகனத்தில் திரும்பி பார்க்க வைத்தாயே என்னையும்
மோக அரைக்குள் தீயிட்டு எரித்தாயோ
உன் கை விரல் பாதங்கள் படாமல்
குடுவையில் அடைத்து ஆற்றில் கரைத்தாயோ
கனவிலும் கலங்காமல் நீ

உன் ஒரு சொட்டு கண்ணீரில் என்னை அணைத்தாலே
என் தேகமும் மகிழ்வு அடையுமோ
பார்த்துக் கொண்டே கடந்து செல்கிறாய் மகனே
இன்று நீ என்னை கடந்தாயோ நாளை உன்னை கடக்க யார்?
மாறும் காலத்தில் உன் கடமைகளையும் கலைத்து விட்டாயோ
அவசர அவசரமாக
உன் அலங்கார ஆர்ப்பாட்டத்தில் என்னை மறந்தாயோ
மயானத்தில்
என் கடைசி நொடியிலும் உன் கைவிரல் படாமல்



கவிஞர் ம.செல்லமுத்து,நுத்தப்பூர்

# இயற்கை எழில் கொஞ்சும் குமரி

இந்தியாவின் தென் முனையில் அமைந்த நகரமே
முக்கடலும் சங்கமிப்பது குமரியில்
மும்மதங்கள் சேருவதும் எங்கள் குமரியில்
எழில் கொஞ்சும் எம் மண்ணின் அழகு என்னை இரசிக்க வைத்தது
கடற்கரை பக்கம் காற்று வாங்க செல்கையிலே
கடலை விற்பனை செய்பவனுக்கும் கவலையில்லை
சிறிது தூரம் செல்கையில் மணல்
வீடு கட்டி விளையாடும்
மழலையர் கூட்டம்
எங்கு பார்த்தாலும் காதல் ஜோடிகள்
காதல் வசனம் பேசி
செல்கையில் உள்ளம் மகிழுமே
பொன்னிற அலையும் பொறுமையாய் அடிக்க இரசித்து நின்றேன்
கூட்டம் கூடினாலும் படகு
பயணம் எங்களை குதூகலம் தந்ததே
கூட்டம் அலை மோத
ஐயன் வள்ளுவன் தனிமையில் நின்று அழகை ரசித்தாரே
பறந்து விரிந்து நிற்கும் கடலின் நடுவே
நிமிர்ந்து நின்றாரே சுவாமி விவேகானந்தர்
குமரி தமிழின் பெருமையை உலகறிய செய்ததே
கடற்கரை ஓரம் சுனாமி
சின்னம் கருணைக்கு தனித்துவமே
புகைப்பட கலைஞனுக்கு புகழ் பெற்ற இடம் சன்செட் பாயிண்ட்
எங்கும் பார்த்தாலும் சோலைகள் கண்ணிற்கு குளிர்ச்சி தருமே
எழில் கொஞ்சும் குமரிக்கு அழகு சேர்க்க உலக்கையருவி
வெளி நாட்டு பயணிகள் அடிக்கடி வந்து செல்வாரே
எம் குமரியில் பல சுற்றுலாத் தலங்கள் உள்ளதே
சேர சோ பாண்டிய நாயக்கர் போன்ற
பல அரச சாம்ராஜ்யங்களால் ஆளப்பட்டதே
கடலாலும் மலையாலும்
நீர் நிலைகளாலும் நிறைந்தது எங்கள் குமரி

கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# ஒளிந்து கிடக்கிறது

அப்போதிருந்த குதூகலம் இப்போது இல்லை
அப்போது இருந்து படபடப்பு இப்போது இல்லை
அப்போது இருந்த உற்சாகம் இப்போது இல்லை
அப்போது இருந்த குறும்புத்தனம் இப்போது இல்லை
வாழ்க்கை எவ்வளவு விடயங்களை மாற்றிப்போட்டு விடுகிறது
எத்தனையோ வசந்தங்களைப்
புரட்டி வீசிவிடுகிறது
வெறுமைக்குள் விரல்களை
நீட்டி வெட்டியாய் தேடிக் கொண்டிருக்கிறாய்
சூனியத்திற்குள் முடிவின்மையாய் முகம்
புதைத்திருக்க
முனிகளுடன் தத்துவம்
விவாதிக்கத் தலைப்படுகிறாய்
அந்தரங்க அரங்கில்
உதடு கடித்துப் பொறுத்திருக்கிறாய்
அப்போதிருந்த எல்லாம் இப்போதும் இருக்கிறது
ஆனால்
பரிணாமம் வளர்ந்து விட்டது என்ற
முனங்கலுக்குள்
ஒளிந்து கிடக்கிறது உன்
சிறுபராயத் தொன்மம்

கவிஞர் மரு.ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# அன்பென்பது யாதெனில்

அன்பு பற்றி பேசிட முடியும்;
அன்பு இதுதானெனக் காட்டிட முடியுமா?
அண்டி பிழைத்திடும் விலங்குகள் பறவைகள்
அளவற்ற தொல்லைகள் தரும்போதும் அவற்றை
அடித்து விரட்டாது அன்புகாட்ட முடியுமா?

பாசம் காட்ட தெரிந்த மனிதன்
பக்குவம் அடைந்தால் அன்பு காட்டுவான்;
புவிக்கடியில் இடம்பிடிக்க போராடும் மனிதனின்
புவிமேல் போராட்டமே வாழ்க்கையெனும் பெயர்பெற்றது!
பாவம் மனிதன் பாசத்தில்சிக்கி பரிதவிக்கிறான்!

கிராமப்புற இல்லமென் இல்லம்; மரங்களுமுண்டு!
கிளிகளும் குருவிகளும் மைனாக்களும் கும்மாளமிடும்!
அணில்கள் வந்து ஆட்டம் பாட்டம் போடும்!
அடியேன் வீட்டிலும் ஒருமகிழுந்தும் இருசக்கர
வாகனங்கள் சிலவும் கடவுளருளால் உண்டு!




அன்பே சிவமென்பது அடியேன் கொள்கை;
ஆயினும் அணில்களின் தொல்லை தாங்கவியலாது
தவித்தது உண்டு; அவையென் இல்லத்துள்ளும்
தாவிகுதித்து இனப்பெருக்க காலத்தில் கூடுகட்டும்;
இருசக்கரம், மகிழுந்து ஆகியவற்றுள் கூடுகட்டும்!

மின்னினைப்புகளைக் கடித்துக்குதறி அடிக்கடி செலவுவைக்குமவை;
மனத்தில் கோபம் கொப்பளிக்க கொலைவெறியோடு
அணில்களைக் கொல்ல திட்டமிட்டு அணில்களோடு
அழகான குருவிகளும் சாகக்கண்டு வருந்தியது முண்டு!
செய்வதறியாது நொந்து அணில்களைச் சபித்திருந்தேன்!

டென்மார்க் சார்ந்த மனிதர் ஒருவர்
இன்றெனுக்கு உணர்த்தினார் அன்பென்பது இன்னதென்று!
அருமைமிகு மகிழுந்தில் புறாவொன்று அடைகாக்க
அதவிருக்க விரும்பும்வரை இருக்கட்டுமென அமைதிகாக்கும்
அந்தவன்பை உங்களுக்கும் காட்டிடவிக் கவிபடைத்தேன்!

(குறள் 74:

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பு என்னும் நாடாச் சிறப்பு.

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# ஆசானின் நிலை

அகிலத்தை அறிய வைத்தேன்
ஆறறிவை உணரச் செய்தேன்
இல்லம் தேடி பாடம் புகட்டினேன்
ஈகையை வளர்க்கச் செய்தேன்
உண்மையை உரக்கச் செய்தேன்
ஊனமுற்றோர்க்கு ஊன்றுகோலாய் ஆனேன்
எளிதில் புரிய வைத்தேன்
ஏற்றத்தில் ஏணியாய் வலம் வந்தேன்
ஐயத்தை நாளும் விளக்கினேன்
ஒற்றுமையைக் கற்றுக் கொடுத்தேன்
ஓங்கிய குரலுடன் பணியாற்றினேன்
ஔவியமில்லா ஆசானாக திகழ்ந்தேன்
அஃதே வாழ்க்கையென வாழ்ந்தேன்

அனாதை ஆனேன் இன்று
குருவிற்கு குரல்கொடுக்க யாருமில்லை



கவிஞர் தி.சரவணன்,சங்கரன்கோவில்

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

# அவளதி(ல்)காரம்

மின்மினி இறகோடு காற்றாக நான் வருவேன்
வெளிச்சத்தை நீ கொடு
விடை முழுதும்
நான் தருகிறேன்.

□

தூண்டில் வளைவில்
வளைந்த காதலை
இரையில்லாம் மீன் பிடிக்க வைத்தது காதல் - உன்
இதழெனும் இலை கொண்டு
பசியை மட்டும் குளமாக்கிச் செல்.

□

நீண்ட சாலைகளில்
உன்னுடன் பயணம்
மைல்கள் அடுத்த அடியாகிறது.
அதோ அந்த வானம்
மிக அருகில் ஆனது
நீளட்டும் காலம் நீயும் நானும் காலடித் தடமாகிடுவோம்.

□

தினம் கரையும் காக்கையிடம் உறவை வேண்டுபவள் நீ
உயிராக வந்த எனக்கு
படையலாகிவிடுகிறது உன் கோவங்கள்.

□

அலைபேசி காதலுக்கு பெயர் போனவர் நாம்
நின் தலையணைகளில் அமிழ்த்திய
என் காதல் வரிகளுக்கு பதில்ளி.

உலகம் நின்றாலும்
நீடிக்கும் அவளதி(ல்)காரம் என்னுள்.

கவிஞர் சே கார்கவி,நாகப்பட்டினம்

# எதைக் கண்டும் அஞ்சாதே!

எதை கண்டும் அஞ்சாதே எழுந்துநில்!
பெண்ணே நீ சாதிக்க பிறந்தவள்!
பிறரின் வீண் பேச்சை தினம் கேட்டு.
உன்னை நீயே மாய்த்துக் கொள்ளாதே!
நாக்கு நரம்பில்லாது பேசும் கோழைகளின்
வார்த்தைகளுக்கு ஏனடி நீ பயப்படுகிறாய்?
பெண்ணெனும் தீ நீ!
ஆயிரம் புகழ்களுக்கு சொந்தமானவள் நீ!
உன்னை கண்டு அதிசயிக்க உலகமே காத்திருக்கிறது.
எதைக் கண்டும் அஞ்சாதே நீ!
பாயும் புலியாக கற்கும் சிங்கமாக.
உன் இலக்கை நோக்கி வீர நடை போடு!
உலகமே உன்னை கைகொட்டு ரசிக்கும்.
தடைகள் தாண்டி தடங்களை பதித்திடு!
வாழ்க்கையில் உனக்கானதை தேடிடப் போராடு!
சூழ்ச்சி செய்து வீழ்த்த எத்தனிப்போரை,
நேர் பார்வை கொண்டே தட்டிக் கழித்துவிடு!
அறிந்து கொள்ளட்டும் உன் பலத்தினை
எதைக் கண்டும் அஞ்சாதே நீ!
வாழ்வில் உயர் பெறுவாய் என்றென்றுமே!



கவிஞர் ஹம்னா அக்பர்,இலங்கை

# மெய்யுணர்தல்

**அதிகாரம்: 36**




எத்தன்மையாயினும் புறப்பொருள்
கண்டுமயங்காது அப்பொருளின்.
மெய்த்தன்மை அறிவதே
மெய்யுணர்வு என்றாகும்.

உண்மையற்றதை உண்மையென
உள்ளுணரும் மயக்கத்தினால்.
சிறப்புடையப் பலவகை
பிறப்புகளும் தோன்றும்.

உலகமயக்கம் நீங்கி
குற்றமிலா மெய்யுணர்வுடையோர்க்கு.
அவ்வுணர்வே அறியாமைநீக்கி
இன்பநிலை தரும்.

ஐயமில்லா தெளிவுபெற்ற
மெய்யறிவாளர்க்கு இவ்வுலகைவிட.
ஆகாயம் மிகஅண்மையும்
உறுதியானதும் ஆகும்.

மெய்யுணர்வு அற்றோர்க்கு
ஐம்புலன்களின் வேற்றுமையில்.
ஐயுணர்வும் முற்றினாலும்
என்ன பயனுமில.

கற்பவைக்கற்று இவ்வுலகின்
மெய்ப்பொருள் உணர்ந்தோர்.
இப்பிறப்பிற்கு மீண்டுவராத
பெருநெறியை அடைவர்.

உண்மைப்பொருள் ஆராய்ந்து
உறுதியாக உணர்ந்தானுக்கு.
மீண்டுமொரு பிறப்பு
உள்ளதென எண்ணவேண்டா.

பிறவித்துன்பந்தரும் அறியாமைநீங்கி
வீடுபேறென்னும் செம்பொருளை.
முயன்று கண்டுகொளலே
மெய்யுணர்வு ஆகும்.

எப்பொருளிற்குமான செம்பொருள்
உணர்ந்து பற்றறுத்தால்.
பொருள்சாரும் துன்பங்கள்
திரும்பவந்து சேரமாட்டா.

காமகோபமயக்கமெனும் மூன்றையும்
மனதிலிருந்து நீக்கிவிட்டால்.
இக்குற்றத்தால் நேரிடும்
பிறவித்துன்பம் கெடும்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# மீன்களோடு மீனாக



குளிரூட்டப்பட்ட வரவேற்பறையினுள்
கண்ணாடித் தொட்டியினுள்
நீந்தி விளையாடும் வண்ணமீன்களை
கண்டிடும் கண்களும்

கொஞ்சநேரம் அம்மீன்களோடு
விளையாடுவதென தீர்மானித்து
எட்டிக்குதித்திட

தெறித்து விழுந்திடும்
நீரும் அந்தப்பளிங்கு தரையினில் புரண்டோட
அவ்வழியே நடைபழகிடும் சிறுபிள்ளையென
சிந்தியநீரால் வழுக்கி விழுந்திட

கூழாங்கற்கள் நிரப்பிய தொட்டியினுள்
ஆக்சிஜன் குழாயால் சுவாசித்து திரிந்திடும் மீன்களை
வேடிக்கை பார்த்திடும் அறியாவிழிகளின் விரல்களால்
விபரீதமொன்று அரங்கேற

அறையெங்கும் ஓடியநீரில்
நீந்தி எளிதில் கிடைத்திடும் ஆக்சிஜனை உள்வாங்கி
உயிர்வாழ்ந்திட முடியாமல்
துடிதுடித்து மீன்களோடு மீனாக சாகிறேன்.

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# தமிழ் பா (பாட்டு)



அகப்பிணி அகற்றும் அருமருந்தாம்
அறவோன் ஆக்கும் நூல்.

உயிரன்பு யாதெனில் பல்லுயிர்க்கும்
ஒப்புரவு செய்திடல் ஆகும்.

நல்லொழுக்கம் வாழ்வை நெறியாக்கும்
தீயொழுக்கம் இருள் சூழும்.

மனமொன்றி போகும் மணவாழ்வின்
மரபுக்கொடி தழைக்கும்.

கவிஞர் செ.தமிழ்நேயன்,சென்னை

# பொம்மலாட்டம்

வெற்றுக் காகிதம்
மையப்புள்ளி
தாண்டி
வியாபித்துக்
கொண்டிருக்கிறது



மழை
அறிவிக்கா
தவளைகள்
பூச்சிகள்
பிடிக்கின்றன

ஓட்டை
குடுவை வழியே
வான மழை
ஒழுகிக்
கொண்டிருக்கிறது

ஓவியத்தில்
ஆசைகளற்ற
புத்தன்
அலங்கரிக்கப்படுகிறான்

வழக்கம்போல்
பத்தாவது காதில்
பகிரப்படும் கதையில்
சிங்கத்திற்கு
கொம்பு முளைக்கிறது



தீபங்கள்
தீக்குளித்தபடி
வெளிச்சத்தை
நிரூபிக்கின்றன

குத்தி கிழித்த
கற்கள்
ஆறுகளுக்கு
மலையின் சாயல்
கொடுக்கிறது

தூரத்தில்
ஒரு குழந்தை மட்டும்
பொம்மலாட்ட
கயிறுகளோடு
சிரித்துக் கொண்டிருக்கிறது.

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# முள்ளும் ஒரு நாள் மலரும்

கருவறையில் உருவாகி
கள்ளிப்பாலில் தப்பித்து
ஐந்தாவது பெண்ணாய்
பூமியில் தடம் பதித்த
கள்ளிக்காட்டுப் பூ இவள்!
பொட்டைக் கழுதைக்குப் படிப்பெதற்கு?
வாதாடி, போராடி பள்ளிக்குப்
போக அனுதினமும் போராட்டமே!
ஆணுக்கான உலகமிது
ஆணவ, அதிகாரத்தின் ஆட்டம்!
அஞ்சி அஞ்சி வளர்ந்தாள்
வாழ்க்கை முழுதும்
பேச்சும், போராட்டமும்
பாறையாய் அவளை செதுக்கியதே!
ரௌத்திரம் வழி நடத்தியதே
நெருப்பிலிட்டு தட்டித் தட்டி
தன்னைக் கூர்வேலாய்
பட்டைத் தீட்டி நிமிர்ந்து நிற்க
முள்ளால் நிறைந்த பாதை
மலர் படுக்கையாய் மாறி போனது!
மங்கையவள் வாழ்வும் மலர்ந்ததே!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# பூத்திருந்த சோலையிலே காத்திருந்தேன் ஆசையிலே!



கண்ணடுச்சு கண்ணடுச்சே எனக்கவுத்த காளையரே!
கண்மாக்கரையில காட்டுப்பிச்சி பறிச்சு கொடுத்து

மாந்தோப்புக்குள்ள மடியில சாஞ்சு படுத்து
முந்திரித் தோப்புக்குள்ள முத்தம் கொடுத்து
வாழத் தோப்புக்குள்ள வம்புக்கு இழுத்து
சோளக்காட்டுகுள்ள நாம
சோடிசேந்தது போதுமய்யா.

மாசிமாசம் பொறந்துருச்சு
மூணுமுடுச்சுப்போட நேரமாச்சு மச்சானே!

மல்லுவேட்டிய மடுச்சுக்கட்டி மாட்டுவண்டிய பூட்டிக்கிட்டு
கல்லுப்பட்டிச் சந்தைக்கு காத்தா போருமய்யா.
பரிசப்புடவ தாலி வாங்கி வாருமய்யா.

வெள்ளிக்கிழமை வெளக்கேத்தி
வெறசா சேர்ந்து
கள்ள மச்சானுக்கு கணக்குயில்லாம பெத்துத்தாரனய்யா.

கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல், சென்னை

# வரமாய் வந்தவனை

என் வாழ்வில் வசந்தம் வீசிட
என் நாட்களை அழகாக்கிட

இந்த நிலவினில் நீயும் நானும் கண்டு ரசித்திட
இயற்கை அழகினை விவரித்திட
வார்த்தைகள் இல்லை போலும்!

வானிலே மிதந்து
நீயும் நானும் பேசிய பேச்சுக்கள் அசைபோடும்
பகலையும் இரவினையும் கண்டாலே
மெய்சிலிர்த்து போகும்!

நிலவொளியில் உன் முகம் பார்த்தால்
வாழ்வே சொர்க்கம் ஆகுதே
என்னில் வரமாய்
வந்து என்னில்
கலந்தவனே!



கவிஞர் ஜெனி கிரேஸி,மதுரை

# சலதோசம்

தலையில் நீர்கோர்க்க
தலைபாரம் அதிகரிக்க
நீரேற்றத்தை வெளியேற்ற
மூக்கை துணைக்கழைக்கும்
தலைக்குள் ஏறும்போது
தணிவாய் இருக்கும் நீர்
வெளியேறுகையிலோ
பாடாய்படுத்திடுமே.
"தலைக்கணம்" கூடினாலே
தாறுமாறாய் தான் முடியுமோ?
சலதோசமோ சனிதோசமோ
என்பதற்கிணங்க பாகுபாடில்லை
குடும்பத்தினரின் சலதோசத்திற்கு
கஷாயம் காய்ச்சிக் கொடுத்து
வெந்நீர் ஆவிபிடிக்க
வாய்க்கு வக்கணையாய்
தூதுவளைரசமும் சோறும்
மிளகிட்டக் கஞ்சியும்கரைத்துக் கொடுத்துதோசம் போக்கிட
பகர்ந்து வந்தே பாடாய்ப்படுத்திட
பணிகள் எதுவும் முடங்கிடாமல்
பாங்காய் முடித்திடும் இல்லாளுக்கோ
"ஆவி பிடிப்பதற்கென்ன?"அம்சமாய் வந்திடும் அறிவுரை
அடுப்பில் வெந்நீரேஅவள்தானே வைத்திடவேண்டும்?
சுருண்டு கிடந்திட்டாலும்
சுக்குநீர் வைத்து தந்திடவும்சுத்தமாய் ஆளில்லையே.



கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# மரத்திற்கு இணை மரமே

'நான் மனிதனல்ல மரம்'
என்றவனைப் பார்த்துக்
கிளைகளை அசைந்தது
அமைதியான அந்த மரம்

தன்னால் பயனுறும் உயிரிகளால்
தான் முழுமையாக அழிந்தாலும்
யாரையும் குறை பேசாது
வஞ்சம் தீர்க்காது
மீண்டும் தழைத்து
பல்லுயிர்களின் நலன் காக்கும்
கடவுளாம் மரங்கள்
ஒற்றை வேண்டுகோளை
மனிதனிடம் வைத்தன

'எங்களை உங்களுடன் ஒப்பிடாதீர்கள்.
சுயநலமற்ற நாங்களும், நீங்களும்
எப்பிறவியிலும் ஒன்றென ஆகமுடியாது'

கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு ,சென்னை

# உடைபடாத நம்பிக்கை

அந்த இரவுகளின் மத்தியில்
அகற்றிவைத்த ஆடைகளின்
ஈரம் செறிந்த நிழல்கள் போதும்
வலிகளுக்கு மத்தியில்
சிற்றின்ப போதைப் பேச்சுக்களால்
நீளும் தொடக்கத்தில்
ஒருபோதும் வலுவிழந்து
வாய்விட்டுக் கதறி அழுதிடாத
இரு இதழ்களின்
உடைபடாத நம்பிக்கை
உனக்கே உரித்தானதென்பதற்கு.



கவிஞர் ராஜா,சேத்தியாத்தோப்பு

# கண்ணாடி

நிஜத்தின் மறுமுகமாய்
நிழலின் பிரதிமுகமாய்

நிகரில்லா காட்டிவிடும்
நிசதமான உண்மைகளை

மாயத்தை உருவாக்க
மாற்றங்களை தந்திடுமே

மருவிவரும் காலத்தில்
மறுமுகமாய் காட்டிடுமே



கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# வெள்ளிக் கம்பி மழையில் நனைந்திடவா

மிதமாக பெய்யும் மழையுடன்
இதமான குளிர்ந்த காற்று
இடரில்லாமல் வீசுகிறது.

மாலைப் பொழுதின் மயக்கத்தை
மழுங்கடிக்கும் மழைப் பொழுதின்
விலையில்லா போதை.



மனதின் பழைய பெட்டகத்தில்
மாறாமல் மறைந்திருக்கும் உன்
நினைவுகளை மீட்டிச் செல்கிறது.

மழையில் நனையாமல் இருக்க
நான் ஒதுங்கிய பேருந்துநிறுத்தத்தில்
ஏற்கனவே நீ நின்றிருந்தாய்.

அறிமுகமில்லா நம் பார்வைகளின்
அழகான முதல் பரிமாற்றம்
அறிகுறியில்லாமல் பொழிந்த
அன்றைய மழையில் அரங்கேறியது.

தவமிருந்தாலும் கிடைப்பதற்கரிய
வரப்பிரசாதம் மழை பலருக்கு
அன்று எனக்குமானது.

விடுமுறைக்காக மழையை வேண்டும்
பள்ளி மாணவனைப் போல்
இறைவா இம்மழை நிற்காது
தொடர வேண்டினேன்.

சில நிமிடங்களில்
மழை மறைய
மழையில் முளைத்த
காளானாக நீ.

மழைக்காக ஏங்கும்
பாலைவனமாய் நான்.

கவிஞர் மு.அமானுல்லாஹ் பாகவி செங்குன்றம்

# காதல் புன்னகை

காற்றில் கற்பூரமாய் கவலைகள் கரையும்
இன்முகம் கண்டதும் இன்னல்கள் குறையும்

சூரியனை கண்ட பனியாய் மறையும்
மந்திர புன்னகையில் மனமே நிறையும்

அமுதக் கண்கள் ஆனந்தம் கொள்ளும்
அவளையே நினைத்து காலங்கள் தள்ளும்

களைப்பான உடலும் புத்துணர்ச்சி பெறுமே
இன்னல்கள் நீக்கி இன்பத்தை தருமே



கவிஞர் ஜெ.சிவக்குமார்,அருளவாடி

# படை ஒன்று செய் இளைஞனே

நாம் வாழ்வது மானுட உலகம்
நல்லவரும் இங்கேதான்
தீயவரும் இங்கேதான்
நம் சீரான மனநிலை கொண்டு
இல்லையென்றால்,
இவர்கள் மனதை துன்புறுத்தி
விடுவார்கள்.
நல்லவரை நம்புவதும் அளவுதான்
தீயவரை நம்புவதே சந்தேகம்தான்
நான்கு அறிவு கொண்ட விலங்கை விட,
பொறாமையிலும்
தீய குணங்களிலும்
உயர்ந்தே
நிற்கிறான் மனிதன்
இங்கே ஓர் செயல் புரிய
கவனமும்
தீரா நம்பிக்கையும்
விடாமுயற்சியும்
கொஞ்சம் சுயநலமும்
இருந்தாலே நன்று
யாரையும் நம்பி ஒரு செயல்
புரிய முடியாது.
உன்னை மட்டுமே நம்பு!
அளவு கடந்த
நம்பிக்கையிலும்
அளவு கடந்த துணிச்சல்
கொண்டும்
அளவு கடந்த உறுதியிலும்
நிலைத்து நின்றாலே
நீ இங்கே வெற்றி பெற
முடியும்.
ஏன்? என்றால்
இது மானுட உலகம்
இங்கு விழித்து இரு. (வாழ்க்கை)



கவிஞர் சி.சிவப்பிரியா,பொன்செய்

# இதயம் பேசுகிறது

காதல் கிறுக்கலுக்கு, கருப் பொருள்
ஆனவளே.
பட படக்கும் உன் விழி கண்டு
பட்டாம்பூச்சி பிடிக்க பின்னோடும்
மழலையைப் போல் உனை
தொடர்கிறேன்.
சிப்பி வாய் திறந்து நீ கதைக்கும் போது
பளிச்சிடும் முத்துக்கள்,
கார்த்திகைப் பூவின் வண்ணத்தை
ஒத்த,உன் அதரங்களுக்கு முத்தாய்ப்பு.
உன் ஒவ்வொரு அசைவுகளும்
என்னுள் பலநூறு கவிதைகளை
பிரசவிக்கிறது.
நீ தாண்டிச் சென்றாலே எனை
தீண்டிச் சென்றது  போல்
தேகமது காந்தள் மலரின்
வண்ணத்தை பூசிக் கொள்கிறது.
பட்டுப் போன்ற உன் பாதம் தழுவிய
சதங்கைகளின், கீர்த்தனைக்கு
தாளமிடும் என் இதயத்தின்
ஓசை கேட்கிறதா?.
ஒரு முறையேனும் திரும்பிப்பார்.
கரையும் கணங்கள், யுகங்களானாலும்
காத்திருப்பேன் உன் காதலுக்காக.



கவிஞர் சாந்தி,காங்கயம்

# ஒத்திகை

இளம்பிறையை
முன்னால் அனுப்பி
ஒளியின் அளவை
கணக்கிட்டு கொள்வது
பௌர்ணமி நிலவின்
ஒத்திகை



குளிர் சாரலை
முன்னால் அனுப்பி
மண்ணின் மலர்ச்சியை
கணக்கிட்டு கொள்வது
பெருமழையின்
ஒத்திகை

ஒரு மொட்டை
மலர வைத்து
சுகந்தத்தின் பரவலை
கணக்கிட்டு கொள்வது
ஒரு வசந்தத்தின்
ஒத்திகை

ஒரு குழந்தையாக
முன்னால் ஜனித்து
வாழ்வின் நிஜங்களை
கிரகித்துக் கொள்வது
முழுமனிதனின்
ஒத்திகை

இயற்கையோ
ஜீவராசிகளோ
ஒத்திகை பார்த்து
வெல்ல முடியாதது
காலம்

அழைப்புக்கு உடன்படாமல்
கட்டுக்குள் அடங்காமல்
எதிர்பார்ப்புகளை
உடைத்தெறிந்து
அரங்கேறிவிடும் காலம்
ஒத்திகை பார்ப்பதில்லை.

கவிஞர் ஐ.தர்மசிங்,நாகர்கோவில்

# நிலமிசை நீடு வாழ்வார்

அன்பின் உருவாய் அகிலத்தில் அவதரித்தோர்
பண்பின் உறைவிடமாய்ப் பரிதியாய் உதித்தோர்

உதவும் குணத்தால் உலகிற் சிறந்தோர்
உண்மை உரைத்தே உன்னதம் பிறந்தோர்

பெரியோரை மதித்துப் பெருமை பெற்றோர்
சிறியோரை நேசிக்கும் திறமை கற்றோர்

வறுமை அதிலும் செம்மை ஆனோர்
பொறுமைக் கடலில் முத்துக் குளித்தோர்

நம்பிக்கை அதற்குப் பாத்திரம் ஆனோர்
நட்புக்காய்த் தோள் கொடுத்துக் காத்திரமானோர்

அடுத்தவர் நலனில் அக்கறை உள்ளோர்
அதிகாரத்தின் நேர்மையால் எக்கறையும் அற்றோர்

கொடுத்த வாக்கைக் காக்கும் நல்லோர்
கொடுமை ஆட்சி புரியா வல்லோர்

வசதி படைத்தும் எளிமையாய் வாழ்வோர்
வருந்தி உழைத்து வலிமையாய்த் திகழ்வோர்

முயற்சி செய்தே முன்னேறிச் செல்வோர்
முடியாத காரியம் முடித்தே வெல்வோர்

அகிம்சை வழியில் அறவழி நடப்போர்
அனைத்தும் பெற்றும் பெருமை அற்றோர்

தேசத்தின் மீது நேசம் வைத்தோர்
தேசம் காக்க உதிரம் வார்த்தோர்

நிலமிசை நீடு வாழ்வாரே ஆவர்
நித்தியமாய் மனதில் நீங்காது நிலைப்பர்



கவிஞர் பஸ்லா பர்ஸான், காத்தான்குடி, இலங்கை

# வைத்திய வெண்பா

## வெற்றிலை
### பஃறொடை வெண்பா

வெற்றிடம் உண்டெனில் வெற்றிலை வைக்கவும்
சிற்றிடம் போதும் சிறுக்கொம்பை யூன்றிட
வற்றாத நீரும் வளமான மண்ணையும்
பெற்றுப் படருமிந்தப் பேராற்றல் மூலிகை
சுற்றி இருந்தால் சுகந்தம் அளித்திடும்
ஒற்றி எடுக்கலாம் உட்சளி நீரும்
மிதமான சூட்டுடன் மேல்மார்பில் வைக்கக்
கதகதப் பாக்கிக் கரையும் சளியால்
இதயம் பலப்படும் ஈளையும் நீங்கும்
குணமாகும் கொண்ட குடல்நோய் அனைத்தும்
ரணம்தீரும் மெல்லுவ தால்.



கவிஞர் கவிதா சீனிவாசன்,கோவை

# மங்கை

மாயவனின் மங்கை அவள்
மன்னவன் உணர்ந்து கொண்டான்
பேதையவள் நெஞ்சமதை.
தடுமாற்றத்தில் உரைத்த வார்த்தை
தவறாய் போய் விட்டது.
புரிந்து கொள்ளா பாவை
பிரிந்து செல்ல நினைக்கிறாள்
உணர வைப்பான் மாயன் அவன்
ஏற்றுக் கொள்வாளா மங்கை அவள்?



கவிஞர் நிலமதி ராஜி,கல்முனை(இலங்கை)

# முதலிரவு

அவள் உதடுகளை ஒருநாளும்
கோவைப்பழங்கள் என
உருவகப்படுத்தியதில்லை;

அவள் உமிழ்நீரை இதழூடாய் நாவருட
உன்மத்தம் தேனெனத்
திகட்டியதுமில்லை;

உச்சிருசித்துப் பள்ளத்தாக்கில்
பொத்தென்று விழுகையில்
வளைவுகளை வருணித்ததுமில்லை;

முதலில் தோற்றது யாராயினும்
அன்றே நிரூபிக்க மீண்டும்
யுத்தத்துக்குச் எழும்பியதில்லை;



வகைவகையாய் யுத்தம் செய்தும்
காதலெனும் பகட்டுப் பேரிட்டுப்
பெரிதாய்த் திரைமறைத்ததுமில்லை;

உவமையும் பொய்யுமில்லாது
உண்மையாய் உறவாடி இம்மட்டில்
எமக்குப் பிள்ளைப்பேறில்லை;

பிள்ளைப்பேறில்லாவிடினும்
ஆசையாய்த் தேர்ந்தெடுத்த பெயர்களை
மாற்றி மாற்றி சூட்டிமகிழ்ந்து
குழந்தைளானதும் உண்டு;

முதுமையில் மூழ்கி மூப்பு தணிகையில்
யாரேனும் ஒருநாள் உயிர்நீத்தலில்
முந்திக்கொள்ள நேர்கையில்

இறுதிச்சடங்கில் உதிர்ந்த மாலைப்பூக்களை
மார்தழுவி அள்ளிவந்து எங்கள்
மெத்தை தூவித் தனித்து ஏகும்
கனக்கண் பொழியும் இரவே எமக்கு
முதலென்று தீர்க்கமாய்த் தீர்மானித்து
அனுபவிப்பது யாரெனும்
துளியச்சமின்றி மெல்ல நகர்கிறோம்
அந்த அமைதியான முதலிரவை நோக்கி

கவிஞர் தயானேஸ்வரன்,வில்லிவாக்கம்,சென்னை - 600049

# விவசாயம்

காலையில எழுந்து கலப்பய தூக்குவோமடி
காபி தண்ணி வரம்புல குடிப்போமடி
காளமாட்ட தயாராக்கி ஓட விடுவோமடி
கால நிலை பாராது ஓடுவோமடி

சேற்று மண்ணுல கால வைப்போமடி
சேறோட போராடி நாங்க செம்மைபடுத்துவோமடி
சேற்றுல மாட ஓட விடுவோமடி
சேறு சோறாக மாற உழைப்போமடி

வயல் வரம்பு வெட்டி விடுவோமடி
வயலுக்கு நீர் பாய்ச்ச வைப்போமடி
வயல் தழைக்க வியர்வை சிந்துவோமடி
வறிய விவசாயி நாங்க தாங்கடி

நெல்லு மணிய தூவி விடுவோமடி
நெல்லு தலைக்க இறைவன வேண்டுவோமடி
நெல்லு துளிர்விட பக்குவமாக பாதுகாப்பமடி
நெருப்பு சூரியனிலும் நின்று உழைப்போமடி



அருவட காலம் வந்ததும் வெட்டுவோமடி
அருவி போல நெல்லு கொட்டுமடி
அடுக்கு அடுக்கா மூட்ட தூக்குவோமடி
அடிக்கிய நெல்ல உலர வைப்போமடி

உலர்ந்த பின்பு நெல்ல குத்துவோமடி
உலகில் அனைவருக்கும் பசி தீர்போமடி
உலகை மறந்து மகிழ்ச்சியில் மூழ்குவோமடி
உலகம் போற்றும் விவசாயம் இதுவடி

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# வெண்ணிலவே அழகு

பச்சை நிற பசுமை
போர்த்திய புல்வெளி அழகு

நீல வண்ணம் நிறைந்த
ஆகாயம் அழகு

அதில் வெண்பஞ்சுகள்
நிரம்பிய மேகங்கள் அழகு

செவ்வானமாய் ஜொலிக்கும்
கதிரவன் அழகு

நீல நிற ஆகாயத்தில்
கார்மேகங்கள் சூழ்ந்து
நிற்கும் காட்சி அழகு

ஓர் நொடியில் உலகை
உலுக்கிடும் வெள்ளி நிற
மின்னல் கீற்று அழகு

அந்நேரம் ஊசியாய் பெய்யும்
மழைத் துளி அழகு

மழைத்துளியை தாங்கும்
செந்நிற மண்ணில் விழும்
குழிகள் அழகு



மழையோடு வீசும்
வண்ணம் இல்லாத
தென்றல் காற்று அழகு

அந்நேரம் தோன்றும்
ஏழு வண்ணம் கொண்ட
வானவில் அழகு

சிகப்பும் மஞ்சளும் கலந்து
எரியும் அக்னி அழகு

இயற்கையோடு வர்ணங்கள்
அழகு தான்

காரிருள் பூசிய ஆகாயத்தில்
மேகங்களின் வெண்மையை திருடி

அதில் கதிரவனின் ஒளி சேர்த்து
ஜொலிக்கும் வெண்ணிலவு
அழகோ அழகு.

கவிஞர் ரதி ஜெயராஜ்,வல்லம்

# நினைவு விழுங்கும் பொழுதுகள்

கண்ணனை
கட்டி வைத்த
தாம்பு கயிறு
தேடி திரிகிறேன்.

நேரத்தை
கட்டி வைத்து
எண்ண நெரிசல்
குறைக்க வெண்ணி.

அவன்
உள்ளங்கை
உண்ட உலகில்
உள்ளதை தேடி
உறங்காமல் திரி(றி)கிறேன்

விரும்பிய பொழுது
விருப்பமின்றி நினைவை
விழுங்குகிறது
கனவோடு
கவிதையும்

அடர் இருளில்
புரியாத யாவும்
மணலாய் இல்லாமல்
மலையாக வளர்கிறது



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# தொலைந்த காதல்

மேகம் சுமந்து வந்து சொல்லும்
உன் நினைவால் நித்தம் தவிக்கிறேன்
மோகம் கொண்ட காதல்தவிப்பில்
நானும் சத்தமின்றி சாகிறேன்
முதல் முத்த ஈரத்தில்
இன்றும் நான் குளிக்கிறேன்
முகம் காண இயலாமல்
அகம் நிறைத்துக் களிக்கிறேன்
நடந்துசென்ற பாதை யெல்லாம்
கடந்துபோன மலர் வனம்
கடந்து செல்ல மனம் விரும்பும்
கனவுகளே யென் சோலைவனம்
மர நிழலில் விழும் மஞ்சள் பூக்களோடு
மனதைத் தொலைத்து
மங்காத ஆசைகளோடு நித்தம் உன் கனவுகளில் விழித்து
விழித்தெழுந்து என்னைத் தேடுகிறேன்
சுழித்தெழுந்து நீராய் ஓடுகிறேன்
தீப்பிடித்து எரியும்காட்டில்
திக்கெட்டாய் பறக்கும் பறவைகளாய்
பூப்பறித்து தொடுத்தெடுத்து
உதிராமலிருக்க புதிதாய் பிறக்கிறேன்
உன் மனங்கொத்திப் பறவையின்று
மகிழ்வின்றி வாடுது
என் மனம் நிறைத்த
மாமர நிழலைத்தானே தேடுது



கவிஞர் அகிலா ஜெயராமன்,செந்துறை,அரியலூர் மாவட்டம்

# பிறந்த தினம் இளந்தமிழனுக்கு



அன்பின் அன்னையவன்
ஆளுமையின் அகிலமவன்
இன்பத்தை பகிர்பவன்
ஈடில்லா இனிமையானவன்
உண்மைக்கு உதாரணமானவன்
ஊக்கத்தின் உறைவிடமானவன்
எல்லோர்க்கும் உதவுபவன்
ஏளனம் செய்யாதவன்
ஐ விரலின் முயற்சியவன்
ஒற்றுமையில் ஒழுக்கமவன்
ஓடத்தின் வலிமையவன்

அமிர்தம் கூட தோற்று போகும்
இவன் தித்திப்பான பேச்சின் சுவையில்
அன்னையின் அரவணைப்பை கூட மறக்க செய்வான்
அன்பாளன் இவன் அன்பில்
தந்தையின் கண்டிப்பை நினைவு கொள்ள செய்வான்
வேலையின் சமயங்களில்
பிள்ளையை மிஞ்ச செய்வான்
சில நேர குறும்புகளில்
ஆளுமைக்கே அரசனாக அரியணை ஏறிய போதும்
அகங்காரம் கொள்ளாத ஈடில்லா பண்பானவன்
விடா முயற்சி ஒன்று மட்டும் மந்திர கோலாம்
இவன் ஏந்திய பொறுப்புகளில்

கவிஞர் இயற்கையின் காரிகை,கோவை

# உலக இட்லி தினம்


மல்லிகைப்பூ போன்ற இட்லியை,
வெறுப்பாரும் யாரும் உண்டோ தரணியில்?
வெளிநாட்டில் இருந்துதான் பரவியதோ,
நம் மண்ணிற்கு வந்த பின்புதான்
புது மெருகு ஏற்பட்டதோ?
கார்போஹைட்ரேட்டும், அதாவது
அரிசியும், உழுந்தில் புரதமும்
மருத்துவ குணமாம் வெந்தியமும்
சேர்த்து அரைத்த முன் இரவில்
புளிக்க, மறுநாள் ஆவியில் வெந்திடும்
இட்லியே, எளிதில் ஜீரணமாகியும் விடுகிறதே!
உடல்நலம் குன்றியவர்களுக்கும்
நோயாளிகளுக்கும் கூட இந்தப்
பண்டம் மருத்துவர்கள் மூலம்
பரிந்துரை செய்யப்படுகிறதே!
ஆவியில் வேக வைப்பதால் எந்த வித
பாதிப்பும் எவருக்கும் எப்பொழுதும்
வரவே வராத இந்த உணவில்
பல தரப்பட்ட வகைகள் உள்ளதே!
வெந்தய இட்லி, கார இட்லி, கீரை இட்லி
ரவா இட்லி, வெற்றிலை இட்லி இப்படி நிறைய,
ஆன்மீக ரீதியாகவும் இந்த இட்லியில்
சொல்லப்பட்டு உள்ளதே!
அரிசியில் சந்திரன், உழுந்தில் ராகு
இப்படி முதல் தரமான இட்லிக்கு,
தொட்டுச் சாப்பிட, தேங்காய் சட்னி,
கார சட்னி, சாம்பார் என்று நிறைய வகைகள்.
இட்லி தினம் கொண்டாடி, மகிழ்ந்து
அனைவரும் உண்போமாக!



கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# ஹைக்கூ

மின்காந்த கதிர்வீச்சுகளில்,
நிலையாக வைக்கப்பட்டுள்ளது,
அழகிய கண்கள்.



கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# மச்சங்கள் பேசும் மவுனங்கள்

நின்றால்
நடந்தால்
நின் ஞாபகம்
தந்தியடிக்குதடி
கண்ணம்மா !

தேடுதலே நம்மில்.

தேற்றுதலோ
போற்றுதலோ
வா!
விரல் பிடித்து
வாழ்ந்துவிட்டு
போவோமே.

உன்னுடன்
இருக்கும்
மனம்
உறங்கா
கவிதையடி !

கருக்கலில்
சிறிது கலைந்து கிடப்போம் !

கலைந்த நிறத்தோடு
கலையாத காவியமாகி
போகட்டும் !



மச்சங்கள்
பேசும்
மவுனங்கள்
போதுமே
மிச்சங்கள்
எதற்கடி கண்ணே!

கவிஞர் ஆர்.மோகன்ராஜ்,சென்னை

# கவிதையும் கணிதமும்

காதலித்தது என்னவோ
இலக்கியத்தைத்தான் !
எனினும்
கரம்பிடித்ததோ கணிதத்தை!

கலைக்கொன்றும்
துரோகமிழைக்கவில்லை
கணிதத்திற்கும்தான் !

எண்ணும் எழுத்தும்
கண்ணெனில்
கவிதையும் கணிதமும்
இருவிழிகளே !




வீசும் தென்றல்போல்
பெய்யும் மழைபோல்
சிரிக்கும் மழலைபோல்
கணிதத்தையும் இரசிக்கலாம் !

நுண்கணிதம் போல்
துல்லியமாய்
திரிகோணமிதி போல் திடமாய்
கவிதையையும் ஆய்ந்திடலாம் !

கவிதையும் கணிதமும்
இரண்டற கலந்தபின்
காதலும் கல்யாணமும்
ஒன்றுதானே !

கலைகளும் கணிதமும்
இரசித்திடவும் ஆராயவும் தான் !
வாழ்க்கை என்பது
வாழ்த்திடத்தான்!

கவிஞர் க.சௌபர்னியா,நெல்லிமேடு

# தேடலின் சுகம்



பூவுக்குள் ஒளிந்திருக்கும்
மகரந்தங்களைத் தேடியே
பூங்காற்றும் பூவிதழ்களை
முத்தமிட;

மண்ணுக்குள் புதைந்திருக்கும்
வளங்களை மணக்கச் செய்திட
மழை வானமும்
மண் மகளை முத்தமிட;

நீயோ உன் இதழ் பதித்த
ஒற்றை முத்தத்தில்
உன்னையே தொலைத்து விட்டதாக
என்னில் உன்னைத் தேடிக்
கொண்டேயிருக்கிறாய்
என் ஆருயிரே!

கவிஞர் மலர் அபி,சிதம்பரம்

# மனிதர்கள் நாங்கள்



படை திரட்டி பல நாள் அலைந்து
காடுகளில் நிலைகொண்டு
மாதங்களாய் பயிற்சி கண்டு
களங்கள் திருத்தி கூடாரங்கள் தைத்து
இயலாதாரை இடம்பெயர்த்தி
நேருக்கு நேராக சண்டையிடும்
காட்டுமிராண்டிகள் அல்ல.
கையில் பொத்தான்
வானிலே ஏவுகணை
நொடியில் வெடிக்கும் குண்டு
கண்மூடித் திறக்கும் முன்
அழிந்து போன தேசம்
சவங்களற்ற சாம்பலுக்குள் உயிர்களென
விஞ்ஞானத்தால் போரிடும்
மனிதர்கள் நாங்கள்.

கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே!
முகமும் தமிழே!!

# உலக கவிதை தினம்




யுனெஸ்கோவின் மாமன்றம் மார்ச்மாத மூவேழாம்
தேதியினை ஞாலத்துச் சீர்கவிதை தினமென்றே
சாற்றியதே! ஐநாசபை ஏற்றதுவே! காடுகட்கும்
இனப்பாகு பாடு நீக்க இந்நாளே! கவிதைகள்
வாசித்தல் எழுதுதலும் கற்பித்தல் மேம்படுத்தல்
கவிதையின் அழகதனை ஆற்றலினைப் பாராட்டல்
சமூகத்தில் அரசியலில் சுற்றியுள சூழலினில்
மாற்றங்கள் ஊக்குவித்தல் பலவகையில் கவிதைகளை
வெளிப்படுத்தல் மரபுகளைக் கொண்டாடல் கவிதைகளின்
நிகழ்வுகளை நன்கமைத்தல் வாசிப்புப் பட்டறைகள்
ஏற்படுத்தல் போட்டிகளை வைத்திடுதல் தொகுப்புகளை
வெளியிடுதல் ஈடுபாடு காணவைத்தல் படைப்புத்திறன்
மேம்படுத்தல் மன்பதையின் மக்களினை இணைத்திடுதல்
எப்போதும் ஏதாவது ஒன்றினுக்கு பாவடித்தல்
கருத்துக்கள் உணர்வுகளை எண்ணங்களை கவிதையிலே
உலவவிடல் வாசகர்களை வசீகரிக்கும் நகர்த்தும்வகை
பாவடித்தல் மக்கள்தம் மொழிகளினை கலைகளினை
கலாசாரத்தை பாதுகாத்தல் தனிப்பட்ட திறமைகளை
உறுதிசெய்தல் போன்றவைகள் நோக்கங்கள் ஆனதுவே!
சர்வதேச தேசீய பிராந்தீய கவிதைவளர்
இயக்கங்கள் ஏற்பளித்தல் மொழியியலில் பன்முகத்துத்
தன்மைகளை ஆதரித்தல் அழிந்துவிடும் மொழிகளினை
மீட்டெடுத்தல் இன்னவைகள் பணிகளென ஏற்றனரே!
யாப்பமைந்த செய்யுளெலாம் கவிதையாம்! பண்ணியைந்தால்
பாடலாகும்! கவிதையிலே மரபுண்டு புதிதுண்டு
வசனமதும் ஹைக்கூபோல் பலவகைகள் ஈண்டுளதே!
வார்த்தைகளின் அலங்காரம் அன்புணர்வின் வெளிப்பாடு
நற்கவிதை என்பதனால் காத்திடுதல் நம்கடனே!
ஆண்டுக்கு ஓர்நாளாய்க் கொள்ளாமல் வாழும்நாள்
எல்லாமும் கவியின்பம் துய்த்திட்டே ஓங்குவமே!

கவிஞர் கணக்காயன்(இ.சே.இராமன்)

# வரிசை

எங்கும் எதிலும் வரிசை பேணிட
முறையாய் அழகாய்
கடமை சிறந்திடும்



நாட்டில் இன்று
பஞ்சம் பட்டினி
தலைவிரித்தாடி
வாட்டி வதைக்கிறது

நாளும் உருவாகும் நீண்ட வரிசைகளால்
உடலும் உள்ளமும் சோர்ந்தே விட்டன

வசதி படைத்தோரையும்
வாட்டி வதைத்திடும்
பொருட்களின் தட்டுப்பாடு
பொறுமையைச் சோதிக்கிறது

பணத் திமிரை நெஞ்சில் களைந்து
பண்பாய் வாழக் கற்றுக் கொள்வோம்

வரிசைகளைத் தினமும் ஒழுங்காகப் பேணி
உயிர்களை மதிக்கும்
உயரெண்ணம் கொள்வோம்

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,கம்பளை

# காலம் எழுதா கவிதை நீயடி

அந்தி மஞ்சளும் அகல் விளக்கின் செந்நிறமும்
அளவாய் சேர்ந்த பொன் நிறத்தவள்
மடக்கிப்பின்னிய சடையில் மஞ்சள் ரிப்பனும்
அழகாய் அதிலே ஆறிதழ் முடிச்சும்
இரு பின்னல்களையும் இணைக்கும் பாலமாய்
கனகாம்பர முகிழைச் சூடியும்
கரிசலாங்கண்ணி மையால் கண்களுக்கு அஞ்சனையும்
ஓரிதழ் தாமரையின் வண்ணத்தை ஈரிதழிலும்
கத்தரிப்பு வண்ணத்தில் பாதம் மறைக்காத
பாவாடை சட்டையும்
காற்றுக்கு மட்டும் மௌனமாய்
மொழி சொல்லும் கொலுசொலியும்
அதிராத பேச்சும் குழையாத கனிவும்
அவளுக்கு மழலை இன்னும் மாறவில்லையே
அரிவையும் தாண்டி பூப்பெய்தாத கன்னி பேதையவள்
அவள் பருவமொத்தவள் இன்று இரு சேயிக்கு தாயாகி விட்டாள்
நீயோ இன்னும் சேயாக உன் மனதோ தாயாக
உன் சரீரத்தில் பருவமாற்றம் ஏதுமில்லை உன் மனதிலும் இல்லை
வதங்கிப் போகும் செம்மலாய் போவதை விட நீ அரும்பாய் அலர்ந்திடு
மலர்ந்தால்தான் மலரா அரும்பே நறுமுகையே
காலம் எழுதாக் கவிதை நீயடி



கவிஞர் கங்கை மைந்தன்,தஞ்சாவூர்

# காலமாற்றம்

பாட்டிக்கால ஆட்டுக்கல்லும்
வீட்டிலிருக்குது! அதை
காட்சிப்பொருளாய் காணும்போது
நெஞ்சம் வலிக்குது!

போட்டி போட்டு அரைத்த காலம் - நினை
வேட்டிலிருக்குது!
கூட்டி அரைத்த கரங்களிலோ - முதுமை
கூடிநிற்குது!
ஆடிக்களைத்த அவர்களுள்ளம் - ஓய்வை
நாடிநிற்குது!



அரைத்த மாவும் பொட்டலமாய்
இங்கே கிடைக்குது!
வாங்கிவந்து வார்த்துவைக்க
வயிறு நிறையுது!

இரைச்சலோடு அரைக்கும் மிக்ஸி
எரிச்சல் கூட்டுது!
இயந்திர வாழ்க்கையிலே- இதுவே
இயல்பாய்ப் போனது!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி,புதுச்சேரி

# அப்பா

காலத்தின் காவியத் தலைவன்
புத்தகம் சொல்லித் தாராத
வாழ்க்கையை
அவர் வாழ்க்கை சொல்லும்
இடர்பாடுகள் ஆயிரம் இருந்தாலும்
இன்பத்தை மட்டுமே பகிர்ந்து கொடுத்து
துன்பத்தை தன்னுள் வைத்து
கொண்டு வாழ்ந்து விட்டு செல்கிறான்
இவ்வுலகில்.
ஆயிரம் உறவுகள் ஆறுதலாக நின்றாலும்
அவருக்கு நிகர் அவர் மட்டுமே.
ஒருபோதும் பிறரிடம் சொல்லவில்லை
கவலையை
இவ்வுலகை விட்டு நீங்கும் வரை
அவர் முகத்தில் குறையவில்லை
புன்னகை.



கவிஞர் மு.கணேஷ்,சேலம்

# நீத்தார் பெருமை

## அதிகாரம்-3

எல்லாம் துறந்தோரே சிறந்தோர்
போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்தாம்
ஆம்
எல்லோரது இன்பத்தைத்
தன் இன்பமாகவும் துன்பத்தைத்
தன் துன்பமாகவும் எண்ணி வாழ்ந்து
இறந்தவர்களே நிறைவானவர்கள்

இறந்தோர் எல்லாம் சிறந்தோர் அல்ல
எல்லாம் துறந்தோரே சிறந்தோர்

ஒழுக்கத்துடன் வாழ்வின் நன்மை தீமைகளைப் புரிந்து நடந்து
இறந்தோரின் புகழைப் பேசுவதே சிறந்தது

இறந்தவர்கள் எல்லாம் பெரியோர்கள் அல்ல
எல்லாருடைய எண்ணமதில் நிறைந்தோரே பெரியோர்கள்.




ஐம்புலன்களையும் கட்டுக்குள் வைத்து
எல்லாம் துறந்தோரே சிறந்தோர்

இவர்களே இந்திரனுக்கு நிகரான வாழ்வு வாழ்பவர்கள்

நற்குணங்கள் கொண்ட இவர்களின் கோபம் கூட சிறது நேரமே..
நிலையற்றதே
இவர்களின் வாழ்வில் புரிதல் போல

புலன் களைப் புலப்படுத்தும்.
சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்..
என்ற ஐம்பொறிகளின் வழியே உலகை அறியும்
நாம் அரிய செயல்களைச் செய்யும்
பெரியோர்களின் பெருமையைப் போற்றுவதே சிறந்தது

எல்லா உயிரும் இன்புற்று வாழ
எண்ணம் கொண்ட அந்தணரே  சிறந்தவர்

கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# மாற்றம் எனும் மாயை



எல்லாமே மாறுது இங்கே தானே
எதுவுமே மாறல என்ன சொல்ல
எங்கேயோ படிச்சு வந்தான்
ஏதேதோ பாடம் சொன்னான்
விளக்கம்தான் நான் கேட்டேன்
மெதுவாக சொல்லித் தந்தான்
நோய் எதுவோ பரவுதாம் உலகம் எங்கும்
வணக்கம் வைக்கணுமாம் கை குலுக்காமல்
மஞ்சள் தினம் சாப்பிட சொன்னான்
புற்று வரமால் தடுக்கும்முன்னான்
வேப்பங்குச்சி துலக்கையிலே கிருமியும் சாகும்முன்னான்
சிறுதானிய உணவுதான் பெருசுன்னான்
அதுவே உயிர் காக்கும் மருந்துன்னான்
எல்லாமே என் ஆத்தா சொன்னது
நீ போயி என்னத்த படிச்ச என்றேன்
உன் ஆத்தாவுக்கு படிப்பிச்சது
அந்த வெள்ளைக்கார துரை என்றான்
கொஞ்சமா கலங்கினேன் நானும் குழம்பினேன்
மாற்றம் என்று ஏமாற்றினான்
மீண்டும் நமதை விற்கிறான் நமக்கே
இனி உன் வரலாறு உனக்கு
அந்நியன் சொல்லிடுவான்
ஆழமாய் படிச்சுக்கோ உயர்தர
அந்நியக் கலாச்சாரத்தை



கவிஞர் ச.குருமூர்த்தி,கரூர்

# இதன் பெயர்தான் காதலா

கன்னங்களும் மருதாணியாய்ச் சிவந்திட
மனமோ தனிமையில் உழன்று தவித்திட
விழிகளோ அலைபாய்ந்து திரிந்து நோக்கிட
கரங்களில் விரல்களும் பிசைந்திட
கால்களும் நில்லாது கோலம் போட்டிட
உடலும் உவகைதனைக் கொண்டிடவே
மனமும் ஆனந்தக் கூத்தாடிட
இதன் பெயர் தான் காதலா?



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# கழறிற்றறிவார் நாயனார் / சேரமான் நாயனார்

(பாகம் : ஒன்று)



சேர நாட்டில் பழமையான திருத்தலம் திருவஞ்சைக்களம்
சேரர் ஆட்சியில் சிறந்து விளங்கியது கொடுங்கோளூர்
சேரர் குலத்தில் அவதரித்தவர் பெருமாற் கோதையார்
சேர அரசனாக இல்லாமல் சிவன் கோவிலே கதியானார்

அரசன் இல்லாத அரியணை எத்தனை நாட்களுக்கு
சிரசு இல்லாத முண்டம், அரசாட்சி இல்லாத நாடு போன்றது .
அரசன் இல்லாத மந்திரிகள் திருவஞ்சைகளம் வந்தார்கள்
பரமன் வழிபாட்டில் இருக்கும் மன்னனைக் கண்டார்கள்

பெருமாற் கோதையாரிடம் அரசை ஏற்கும்படி வேண்டினார்கள்
பெருமான் திருத்தொண்டில் நிற்கும் கோதையார் மறுத்துவிட்டார்
பெருமான் உள்ளம் அறிய குடச்சீட்டு போட்டுப் பார்த்தார்கள்
பெருமான் திருவருளால் சேரநாட்டு மன்னனாக முடிசூடினார்

ஈசன் திருப்பணிகளும் மக்கள் நலனும் இரு கண்களானார்
பாசமிகு மக்களைக் காண பட்டத்து யானைமீது பவனி வந்தார்
நேசமிகு வண்ணான் உவர் மண் மூட்டையுடன் எதிரில் வந்தான்
அரசன் பவனி கண்டு சாலையின் ஓரமாக மக்களோடு நின்றான்

ஈர மண்ணின் மேனி நனைந்து நீறுபூத்து உடல் வெளுத்து நின்றான்
நீர் வழிய ஈசனே கூட்டத்தில் நிற்பதாகக் கண்டு மன்னன் மயங்கினான்
சீருடன் யானை மீதிருந்து கீழே வந்தவன் வண்ணானை வணங்கினான்
ஈசன் திருப்பணிகள், நாட்டின் நலமும் குறையாமல் அரசாண்டான்

சிவனுக்கு திருவமுது பூசையை தினமும் முறையாக செய்து வந்தான்
நவ நடராசனின் ஆடும் திருவடி ஓசை தினம் கேட்டு புசித்து வந்தார்
தவ வலிமையுடன் திருத் தொண்டும் குறையாமல் பதிகம் பாடினார்
எவர் மனமும் கோணாமல் நல்லாட்சியில் மக்களும் நிம்மதியாயினர்

இசையோடு ஈசனையும் அரசனையும் பாடும் பாணன் குலம்
திசைகள் தோறும் சென்று அரசன் பரிசுப் பொருள்களில் வாழ்பவர்
இசை கவிகளில் பாணபத்திரர் சோமசுந்தரரை துதித்துப் பாடுவார்
பசை இல்லாமல் வாடுபவர் செல்வம் கொடுத்தருள வேண்டினார்

இரவு அவர் கனவில் தோன்றினார், பொன்னும் பொருளும் கிடைக்கும்
"தரகனாக நான் தரும் இத்திருமுகத்தை சேரமானிடம் கொண்டுசெல்
வரவாக வரும் செல்வம் அதனில் வாழ்ந்து களிப்பாயாக", என்றார்
சிரசில் தாங்கிய திருமுகம் "மதிமணிபுரிசை" பாடல் எழுதி தந்தார்

சங்கப் புலவர் திருமுகத்தை தலைமேல் கொண்டார் பத்திரர்
அங்கு அப்பொழுதே புறப்பட்டு சேரநாடு அணையை சேர்ந்தார்
தங்கப் பரிசை பெறும் பொருட்டு மன்னன் மாளிகை முன் வந்தார்
"தங்களுக்கு இறைவன் கொடுத்த திருமுகம்" கடிதத்தை கொடுத்தார்

திருமுகத்தைப் பெற்று பாணர் பாதம் தொட்டு வணங்கினார்
பெருமையாக , "என் நாட்டையே தருகிறேன் ஏற்றுக்கொள்ளுங்கள் !"
"கருணைநாதரே , வேண்டாமே இந்த அரச பொறுப்பு மறுத்தார் பாணர்
பொருளாகத் தருவதைப் பெற்றுக்கொள்கிறேன் அரசே" என்றார் பாணர் .

(தொடரும்)

கவிஞர் ந.திருக்காமு

# ஐத்த மவனே ஆசைகொண்ட மச்சானே!

பொஞ்சாதி'னு நீ கூப்பிட
பொழுதும் தூங்காம நானிருக்கேனே!
வச்ச பொட்டும் வாடுதே
வழிஞ்ச கண்ணீரும் காயுதே
வஞ்சியவ நெஞ்சிக்குள்ள !

கை பிடிக்கா காதலும் காகிதமாகுமோ
கசங்கி தான் போகுமோ
கைப்பிடி குங்குமமும் காணாம போகுமோ !

பூட்டிய நெஞ்சத்துல
புதைஞ்சது நீதானே
பொத்தி பார்க்க தான்
பரிசம் ஒன்னு கேட்டேனே !
பாசம் கொஞ்சம் சேர்த்தேனே.



பக்குவமா நீயிருக்க
பாவி மனம் தவிக்குதே
பதிஞ்சு போன நினைப்பும் தான்
பரிதவிச்சு போகுதே
பாராத உன் முகமும்
பார்க்க சொல்லி வேண்டுதே
பால் நிலவும் கொஞ்சம் தேயுதே !

கவிஞர் சந்தியா பாவலன்,வேலூர்

# தமிழறிஞர் புலியூர் கேசிகனார்

## (கட்டுரை)



புலியூர்க் கேசிகன் தனித்தமிழ் எழுத்தாளர், உரையாசிரியர், மெய்ப்பு திருத்துநர், பதிப்பாசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாளர், சோதிடர், எண்கணித வல்லுநர், செய்யுளாசிரியர், ஆவியியல் ஆய்வாளர், சொற்பொழிவாளர் என்னும் பன்முகம் கொண்டவர்.

தமிழறிஞர் புலியூர்க் கேசிகனார், நெல்லையைச்சேர்ந்த புலியூர்க் குறிச்சி என்ற சிற்றூரில் 16-10-1923ல் பிறந்தவர். தந்தையார் கந்தசாமியா பிள்ளை, தாயார் மகாலட்சுமி அம்மையார். பெற்றோர் விவசாயத்தை முதன்மையாகவும், மளிகைக் கடை வைத்தும் வாழ்ந்தனர்.

தன் இளவயதுக் கல்வியை அருகிலுள்ள டோணாவூர் பள்ளியிலும், உயர் நிலைக் கல்வியையும் கல்லூரிக் கல்வியையும் திருநெல்வேலி மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரியிலும் பயின்றவர். கல்லூரி நாட்களில் இந்தி எதிர்ப்பு மாணவராய்த் திகழ்ந்தவர், பின்னர் தமிழ் மீது ஆர்வம் கொண்டு வேங்கடசாமி நாட்டார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, திரு வி.க. போன்ற பல்வேறு தமிழறிஞர்களுடன் பழகித் தன் தமிழ்ப் புலமையை வளப்படுத்திக் கொண்டார்.

# தமிழறிஞர் புலியூர் கேசிகனார்

## (கட்டுரை)

மறைமலையடிகளின் மகளும், திருவரங்கனார் துணைவியாருமான நீலாம்பிகை அம்மையார், உடல் நலமின்றி டோணாவூர் மருத்துவ மனையிலிருந்த போது, கேசிகனாரும் அவரது குடும்பத்தினரும் அளவிலா வகையில் உதவினர். நீலாம்பிகை அம்மையார் குணம் பெற்றுச் சென்னை திரும்பிய பிறகு திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் கேசிகனார்க்கு மேலாளர் பதவி கொடுக்கப் பட்டது. திருவரங்கனார் மறைவுக்குப் பிறகு அவர்கள் மகள் சுந்தரத்தம்மையாரை கேசிகன் மணம் புரிந்து கொண்டார்.

கேசிகனார் தம்பதிகளுக்கு ஒரு மகனும், நான்கு மகள்களும் உண்டு. தந்தையின் அடிச்சுவடுகளிலே சென்ற மகள்தான் கவிஞர் செல்வி கலைச்செல்வி.

கேசிகன் வடுகச்சி மலைப்பள்ளியில் ஆசிரியராக மூன்று ஆண்டுகளும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மேலாளராக பத்து ஆண்டுகளும் பணி புரிந்த பின்னர், சென்னைக்குக் குடியேறியவர் அருணா பப்ளிகேஷன்சில் நிர்வாகியாகப் பணியிலமர்ந்தார். அருணாவில் இருக்கும்போது அதிவீரராமன் இல்லற ரகசியம், கொக்கோகம், சிங்கார நாயகிகள், பெண்மையின் ரகசியம் போன்ற பல நூல்களுக்கு உரை எழுதினார். இன்னூல்கள் அக்காலத்திலேயே ஆயிரக்கணக்கில் விற்று அவருக்குப் பெரும்புகழ் சேர்த்தது. பாரி நிலையத்திலும், மாருதி பதிப்பகத்திலும் பல ஆண்டுகள் கேசிகன் பணி புரிந்துள்ளார்.

# தமிழறிஞர் புலியூர் கேசிகனார்

(கட்டுரை)

பாரி நிலையத்தின் மூலம் சங்க இலக்கியங்களுக்கு எளிய உரை எழுதி மக்கள் மத்தியில் பெருஞ்செல்வாக்கைப் பெற்றார். சிலப்பதிகாரம், மணிமேகலை, புற நானூறு, அக நானூறு மூன்று பகுதிகள், நற்றிணை இரு தொகுதிகள், பதிற்றுப்பத்து, பரிபாடல், குறுந்தொகை கலித்தொகை, புறப்பொருள் வெண்பாமாலை, கலிங்கத்துப் பரணி, முக்கூடற்பள்ளு, ஐங்குறுனூறு ஐந்து தொகுதிகள், தொல்காப்பியம், திருக்குறள், நளவெண்பா, பழமொழி நானூறு, திருக் குற்றாலக் குறவஞ்சி, கம்பன் தனிப் பாடல்கள், காளமேகம் தனிப்பாடல்கள், ஔவையார் தனிப்பாடல்கள் என அனைத்து நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார்.

சங்க இலக்கியங்கள் அனைத்துக்கும் எளிய உரை எழுதி, மலிவுப் பதிப்பில் விற்று, இலக்கியங்களை அனைவர் மத்தியிலும் எளிமைப் படுத்திப் புரிய வைத்தது கேசிகனாரின் தமிழ்த் தொண்டும் சாதனையாகும். மற்றும் மனோசக்தி, எண்களின் இரகசியம், எண்களும் எதிர்காலமும் போன்ற, இவர் எழுதிய பல நூல்கள் இவருக்குப் புகழ் தேடித் தந்தன.

சிறந்த கவிஞர், படிதிருத்துனர், பதிப்பாசிரியர், எழுத்தாளர், மொழி பெயர்ப்பாளர், சோதிடர், எண் கணித வல்லுனர் மற்றும் ஆவியுலக ஆராய்ச்சியாளர்.



இவரது படைப்புகள் — உரை நூல்கள் 50, ஜோதிட நூல்கள் 10, மனோதத்துவ நூல்கள் 5, யோகம் பற்றியது 3, ஆன்மிக நூல்கள் 5, வரலாற்று நூல்கள் 2, குறள் சார்ந்த நூல்கள் 7, தொகுப்பு நூல், ஆராய்ச்சி நூல், கவிதை நூல் — மற்றும் பிற நூல்கள் 8.

புலியூர்க் கேசிகன் ஏப்ரல் 17, 1992ல் சென்னையில் காலமானார்.

(தகவல் நன்றி — கவிஞர் சொ.கலைச்செல்வி எழுதிய "உரையாசிரியர் புலியூர்க் கேசிகன் முதலாண்டு நினைவு மலர்-1993)

திரு.கு.செல்வமுத்துக்குமரன்,நிறுவனர்,சிவம் அறக்கட்டளை


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
என்ன நடந்தாலும் தன் குறிக்கோளில்
மிகத் தெளிவாக இருப்பவனுக்கு தான்
இந்த உலகத்தை வெல்லும்
சக்தி இருக்கிறது.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:
9597887847/8870884969

www.அகரமுதல.com
Aagaramuthalaa

aagaramuthala@gmail.com